2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறைச் சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 8/2010)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

The Tamil Nadu Uniform System of School Education Act, 2010

(Tamil Nadu Act No.8 of 2010)

(as on 31st October, 2023)

தமிழாக்கம்:

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறைச் சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 8/2010)

பிரிவு பொருளடக்கம்

1. குறுந்தலைப்பும் தொடக்கமும்.
2. பொருள்வரையறைகள்.
3. பள்ளிகள் பொதுவான பாடத்திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும்.
4. பயிற்றுமொழி.
5. வாரியத்தை அமைத்துருவாக்குதல்.
6. வாரியத்தில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் வரையறைகளும் நிபந்தனைகளும்.
7. மன்ற உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குதல்.
8. தற்செயல் காலிப்பணியிடத்தை நிரப்புதல்.
9. வாரியத்தின் அதிகாரங்களும் பணிகளும்.
10. குழுக்களை அமைத்துருவாக்குவதற்கான அதிகாரம்.
11. [விட்டுவிடப்பட்டது] .
12. [விட்டுவிடப்பட்டது].
13. குற்றச் செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.
14. [விட்டுவிடப்பட்டது] .
15. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

16. **பணிப்பாணை வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.**

17. **விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.**

18. **இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.**

19. **நீக்கமும் காப்பும்.**

2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறைச் சட்டம்
தமிழ்நாடு சட்ட எண் 8/2010

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2010ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

தமிழ்நாடு மாநிலத்தில் சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறைக்கு வகைசெய்வதற்காகவும் அதனோடு தொடர்புடைய மற்றும் அதன் விளைவான விவரங்களுக்கு வகை செய்வதற்குமான ஒரு சட்டம்.

இம்மாநிலத்தில் மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு வகையான பள்ளிக் கல்வி முறைகள் தற்போது இருந்து வருகின்றன. அவை, மாநில வாரியப் பள்ளிகள், பதின்மப் பள்ளிகள் (மெட்ரிக்குலேசன் பள்ளிகள்), கீழ்த்திசைப் பள்ளிகள் (ஓரியண்டல் பள்ளிகள்), ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் ஆகியனவாகும். இந்தப் பள்ளிகள் தனிப்பட்ட பாடத்திட்டங்களையும், பாட நூல்களையும், தேர்வுத் திட்டங்களையும் கொண்டிருக்கின்றன. மேலும், அவை வேறுபட்ட வாரியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. அதன் விளைவாக இந்தப் பள்ளிகளில் உள்ள கல்வியின் தரமானது சமச்சீரான முறையில் இல்லை என்பதாலும்;

சமூக நீதியை உறுதி செய்து இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குவதற்கு இம்மாநிலத்திலுள்ள பள்ளிக் கல்வியைப் பொறுத்த அளவில் சமச்சீரான முறையை உருவாக்குவது இன்றியமையாததாக இருக்கிறது என அரசு கருதுகிறது என்பதாலும்;

அரசானது, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. முத்துக்குமரன் அவர்கள் தலைமையில், சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காகக் குழு ஒன்றை அமைத்துருவாக்கியது. மேற்சொன்ன குழுவானது, அனைத்துப் பிரச்சனைகளையும் ஆய்வு செய்து தனது பரிந்துரைகளை அரசுக்குப் பணிந்தனுப்பியது என்பதாலும்;

திரு. முத்துக்குமரன் குழுவின் பரிந்துரைகளைக் கவனிப்பதற்காகத் திரு.எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழு ஒன்று அமைத்துருவாக்கப்பட்டது என்பதாலும்;

மேற்சொன்ன ஒரு நபர் குழுவானது, திரு. முத்துக்குமரன் குழுவின் பரிந்துரைகளைக் கவனித்து ஆய்ந்து, தனது பரிந்துரைகளை அரசுக்கு பணிந்தனுப்பியது என்பதாலும்;

திரு.எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் கல்வியாளர் குழு ஒன்று கேரளா, கர்நாடகா, குஜராத், மஹாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களுக்கு பயணம் செய்து அம்மாநிலங்களில் இருந்து வரும் கல்வி முறையை ஆய்வு செய்தது மற்றும் மேற்சொன்ன கல்வியாளர்கள் குழுவானது, பள்ளிக் கல்வித் துறை மற்றும் கல்வி வாரியங்களில் நிருவாக அமைப்புமுறை குறித்தும் அந்த மாநிலங்களில் ஏற்கப்பட்டுப் பின்பற்றப்படும் தேர்வுமுறைகள் ,மதிப்பீட்டு முறைகள் ஆகியன குறித்தும் தனது அறிக்கையைப் பணிந்து அனுப்பியது என்பதாலும்;

அரசானது, பெரும் ஆழ்ந்த ஆய்வுகளுக்குப் பின்னர் இம்மாநிலத்திலுள்ள பதின்மப்பள்ளிகள் (மெட்ரிக்குலேசன் பள்ளிகள்), ஆங்கிலோ – இந்தியப் பள்ளிகள், கீழ்த்திசைப் பள்ளிகள் (ஓரியண்டல் பள்ளிகள்) ஆகியன உள்ளிடங்கிய

அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியன பொதுவான பாடத் திட்டம்,பாட நூல்கள், தேர்வு முறை ஆகியவற்றைப் பெற்றிருப்பது சமூக நீதியை உறுதி செய்வதுடன் தரமான கல்வியை வழங்கும் என்பதான கருத்தினை ஏற்றுக்கொண்டது. அதற்கிணங்கிய வகையில், அரசானது, இம்மாநிலத்தில் சமச்சீர்ப் பள்ளிக் கல்விமுறையை நடைமுறைபடுத்துவது என முடிவு செய்துள்ளது என்பதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

1. குறுந்தலைப்பும் தொடக்கமும்.– (1) இந்தச் சட்டம், 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறைச் சட்டம் என வழங்கப்படும் .

(2) இது, 2009ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. பொருள்வரையறைகள்.– இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "கல்வி ஆண்டு" என்பது, ஜூன் முதல் நாளன்று தொடங்குகிற ஆண்டு எனப் பொருள்படும்;

(b) "ஆங்கிலோ–இந்தியன் பள்ளி" என்பது, ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளுக்கான ஒழுங்குவிதித் தொகுப்பின்கீழ் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட பள்ளி எனப் பொருள்படும்;

(c) "வாரியம்" என்பது, பிரிவு 5இன்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநிலப் பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் எனப் பொருள்படும்;

(d) "தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு" என்பது, அரசினால் அறிவிக்கையின் மூலமாக, அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படும் பரப்பிடத்திற்கான அல்லது அத்தகைய வகையான தனியார் பள்ளி தொடர்பான தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் அலுவல்களை ஆற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரஅமைப்பு எதுவுமோ, அலுவலர் எவருமோ அல்லது நபர் எவருமோ எனப் பொருள்படும்;

(e) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(f) "பதின்மப் பள்ளிகள் (மெட்ரிக்குலேசன் பள்ளி)" என்பது, பதின்மப் பள்ளி (மெட்ரிக்குலேசன் பள்ளி)களுக்கான ஒழுங்குவிதி தொகுப்பின்கீழ் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட பள்ளி ஒன்று எனப் பொருள்படும்;

(g) "கீழ்த்திசைப் பள்ளி (ஓரியண்டல் பள்ளி)" என்பது, பள்ளிக்கல்வி இயக்குநரால் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட பள்ளி ஒன்று எனப் பொருள்படும்;

(h) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது, விதிகளின்படி வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(i) "பள்ளி" என்பது,—

(i) அரசினால் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலும் பேணிவரப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எனப் பொருள்படும்; அல்லது

(ii) அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதியின் (1)ஆம் கூறின்கீழ் அமைக்கப்பட்டு நிருவகிக்கப்படுகிற அரசு நிதியிலிருந்து உதவிப்

பெறுகிற மற்றும் உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளிட்ட தனியார் கல்வி முகவாண்மை எதனாலும் அமைக்கப்படுகிற மற்றும் நிருவகிக்கப் படுகிற அல்லது பேணி வரப்படுகிற தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவும் எனப் பொருள்படும்; அல்லது

(iii) அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதியின் (1)ஆம் கூறின்கீழ் அமைக்கப்பட்டு நிருவகிக்கப்படுகிற அரசு நிதியிலிருந்து உதவி பெறுகிற மற்றும் உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளிட்ட பதின்மப் பள்ளி (மெட்ரிக்குலேசன் பள்ளி), ஆங்கிலோ–இந்தியன் பள்ளி அல்லது கீழ்த்திசைப் பள்ளி (ஓரியண்டல் பள்ளி) எனப் பொருள்படும்; ஆனால், அது இடைநிலைக் கல்வி மைய வாரியத்துடன் இணைக்கப்பட்ட பள்ளி ஒன்றை உள்ளடக்காது.

விளக்கம்.– இந்தக் கூறின் நோக்கத்திற்காக,–

(1) "உள்ளாட்சி அதிகாரஅமைப்பு" என்பது–

(i) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி மாநகராட்சிகள் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம்

எதனின்படியும் அமைத்துருவாக்கப் படக்கூடிய பிற மாநகராட்சி எதுவும்; அல்லது

(ii) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/1920) அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம்; அல்லது

(iii) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994) அமைத்துருவாக்கப்பட்ட ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஒரு கிராம ஊராட்சி,

எனப் பொருள்படும்.

(2) (i) தொடக்கப் பள்ளியானது, I முதல் V வரையிலான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்;

(ii) நடுநிலைப் பள்ளியானது, I முதல் VIII வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் VIII வரையிலான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்;

(iii) உயர்நிலைப் பள்ளியானது, I முதல் X வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் X வரையிலான வகுப்புகளை அல்லது IX மற்றும் X என்பதான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்;

(iv) மேல்நிலைப் பள்ளியானது, I முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது VI

முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது XI மற்றும் XII என்பதான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

(j) "மாநிலம்" என்பது, தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்.

[1][3. **பள்ளிகள் பொதுவான பாடத் திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும்.–**

(1) இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியும் தமிழ்நாடு அரசிதழில் அரசினால் அறிவிக்கை செய்யப்படும் கல்வியாண்டிலிருந்து I முதல் X வரையிலான வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்காகவும் வாரியத்தால் குறிப்பிடப்படும் பொதுவான பாடத்திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும். அரசானது வெவ்வேறு வகுப்புகளுக்கு வெவ்வேறு கல்வி ஆண்டுகளைக் குறிப்பிடலாம்.

(2) உட்பிரிவு (1)இன் படியான அறிவிக்கையானது பிறப்பிக்கப்படும் வரையிலும் இம்மாநிலத்திலுள்ள பள்ளி ஒவ்வொன்றிற்கும் பாடத்திட்டமும் பாடநூல்களும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(a) Iஆம் மற்றும் VIஆம் வகுப்புகளில் 2010–11 ஆம் கல்வியாண்டுக்கு முன்னதாக இருந்து வந்த முறையானது தொடர்தல் வேண்டும்; மற்றும்

---

1. 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறை(திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண்.10/2011) 2ஆம் பிரிவினால் (22.05.2011) முதல் செல்திறம் பெறுமாறு) மாற்றாக அமைக்கப்பட்டது.

(b) II முதல் V வரையிலான வகுப்புகளிலும், VII முதல் X வரையிலான வகுப்புகளிலும் தற்போது இருந்து வருகின்ற முறையானது தொடர்தல் வேண்டும்.]

4. பயிற்றுமொழி.– மொழிப் பாடங்கள் நீங்கலான பிற அனைத்துப் பாடங்களும் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பயிற்றுமொழி அல்லது பிற மொழிகள் எவற்றிலுமோ தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் ஏற்பளிப்புடன் பள்ளி ஒன்றினால் முடிவு செய்யப்படும் விதத்தில் கற்பிக்கப்படலாம்.

5. வாரியத்தை அமைத்துருவாக்குதல்.– (1) அரசானது, அறிவிக்கையின் மூலம், இம்மாநிலத்தில் சமச்சீர்ப் பள்ளிக் கல்வியை வழங்குவது என்ற அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக மாநிலப் பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் என அழைக்கப்படும் வாரியம் ஒன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும். அந்த வாரியமானது, இந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதோடு அதற்கு அளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

(2) வாரியமானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது:–

பதவி–வழி உறுப்பினர்கள்

(a) பள்ளிக் கல்வி இயக்குநர், தலைவராக இருத்தல் வேண்டும்;

(b) அரசு கூடுதல் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை;

(c) அரசுத் தேர்வுகள் இயக்குநர்;

(d) பதின்மப் பள்ளிகள் (மெட்ரிக்குலேசன் பள்ளிகள்) இயக்குநர்;

(e) தொடக்கக் கல்வி இயக்குநர்;

(f) இயக்குநர், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி;

(g) பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி); உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்.

பிற உறுப்பினர்கள்

(a) கல்வி வல்லுநர்கள் மற்றும் புகழ் வாய்ந்த கல்வியாளர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்;

(b) பதின்மப் பள்ளிகளின் (மெட்ரிக்குலேசன் பள்ளிகள்) ஆசிரியர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்;

(c) கீழ்த்திசைப் பள்ளிகளின் (ஓரியண்டல் பள்ளிகள்) ஆசிரியர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்;

(d) ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்.

(3) வாரியத்தின் தலைமையகமானது சென்னையில் அமைந்திருத்தல் வேண்டும்.

(4) வாரியமானது, தேவைப்படும் அந்தந்த நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படும் நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்:

வரம்புரை: வாரியமானது, ஓர் ஆண்டில் குறைந்தது இருமுறையாவது கூடுதல் வேண்டும்.

(5) தலைவர், வாரியத்தின் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(6) வாரியத்தில் காலிப்பணியிடம் எதுவும் இருக்கிறது அல்லது வாரியத்தை அமைத்துருவாக்கியதில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணங்களைத் தவிர வாரியத்தின் செயல்பாடு அல்லது நடவடிக்கையானது செல்லாததாக இருத்தல் கூடாது.

6. வாரியத்தில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பணிவரையறைகளும் நிபந்தனைகளும்.– (1) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்று ஆண்டுக் காலஅளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் மேலுமொரு மூன்றாண்டுக் காலஅளவிற்கு மீண்டும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்:

வரம்புரை: இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காகத் தற்செயல் காலிப்பணியிடம் ஒன்றில் ஓர் ஆண்டுக்கு குறையாத ஒரு காலஅளவிற்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராகப் பதவி வகித்த நபர் ஒருவர், அப்பதவியின் முழுமையான காலஅளவான மூன்றாண்டு காலஅளவிற்குப் பதவி வகித்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், தனது கைப்பட எழுத்து வடிவில் அரசுக்கு முகவரியிட்டுத் தெரிவிப்பதன் மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம்; ஆனால் அவர்தம் பதவி விலகலானது அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் வரையில் அவர் பதவியில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(3) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், முதல்நிலைக் குழுவிற்குப் பொருந்தக்கூடிய அத்தகைய வீதத்திலான அமர்வுக் கட்டணத்தையும் பயணப் படியையும் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

7. மன்ற உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குதல்.– பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், தம்மைப் பதவியிலிருந்து நீக்குவதைத் தகுந்ததாய் ஆக்குகின்ற அளவிற்குத் தன்னுடைய பதவிக்குத் தான் பொருத்தமற்றவராக வெளிப்படுத்திக் கொள்கின்றார் என்றோ, தவறான நடத்தை அல்லது அசட்டைக் குற்றம் எதையேனும் புரிந்த குற்றவாளியாக இருக்கின்றார் என்றோ, அரசுக்கு எந்தச் சமயத்திலேனும் தோன்றுமானால் அரசு, பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினருக்குக் காரணம் காட்ட கோரி நியாயமான வாய்ப்பு ஒன்றினைக் கொடுத்த பின்பு, அறிவிக்கையின் மூலமாக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

8. தற்செயல் காலிப்பணியிடத்தை நிரப்புதல்.– மரணம், பதவி விலகல், பதவி நீக்கம் என்கின்ற காரணத்தாலோ அல்லது மற்றபடியோ பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவியில் தற்செயல் காலியிடம் ஒன்று ஏற்படுமானால், அத்தகைய காலியிடமானது கூடிய விரைவில் அரசினால் நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பெயர்

குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவருடைய இடத்தை அவர் நிரப்புகிறாரோ, அவர் எவ்வளவு காலத்திற்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக இருந்திருப்பாரோ அவ்வளவு காலத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

9. வாரியத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும்.– இம்மாநிலத்தில், சமச்சீர்ப் பள்ளிக்கல்வி முறையை அமைப்பதை உறுதி செய்வதற்காக வாரியமானது, அது தக்கதெனக் கருதக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அதன் கடமையாக இருத்தல் வேண்டும். வாரியமானது,–

(a) பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிற்கும் மற்றும் ஒவ்வொரு படிப்புப் பிரிவிற்கும் பொதுவான பாடத்திட்டத்தையும் பாடநூல்களையும் வகுத்துரைத்தல் வேண்டும்;

(b) தேர்வுகளை நடத்துவதற்கான நெறிமுறைகளையும் சான்றிதழ்களை வழங்குவதற்கான குறைந்த அளவுத் தரநிலைகளையும் வகுத்துரைத்தல் வேண்டும்;

(c) பள்ளிக் கல்வியின் தரநிலையை மதிப்பீடு செய்து பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குதல் வேண்டும்;

(d) அலுவல் எதனையும் பரிசீலனை செய்வதற்காக அது கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான குழுக்களை அமைத்துருவாக்குதல் வேண்டும்;

(e) சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக எடுக்கப்பட

வேண்டிய நடவடிக்கைக் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்;

(f) வகுத்துரைக்கப்படும் அத்தகைய பிற செயற்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

10. குழுக்களை அமைத்துருவாக்குவதற்கான அதிகாரம்.– (1) வாரியமானது, அலுவல் எதனையும் பரிசீலனை செய்வதற்காக, அது தக்கதென நினைக்கக்கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அல்லது குழுக்களை எந்த நேரத்திலும் அமைத்துருவாக்கலாம் அல்லது அதனையே ஒரு குழுவாக மாற்றிக் கொள்ளலாம்.

(2) குழுவானது, வாரியத்தின் தலைவரின் முன் ஒப்புதலுடன் கூடுதல் உறுப்பினரை அல்லது உறுப்பினர்களை விருப்பத்தேர்வு செய்து கொள்வதற்கு அதிகாரங்களைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

(3) குழுவானது, வாரியத்தினால் பணிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாக வாரியத்திற்குத் தனது அறிக்கையினைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

11. [1][*****]

---

1. 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறை(திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண்.10/2011) 3ஆம் பிரிவினால் (22.05.2011 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

12. [1][*****]

13. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.– நீதிமன்றம் எதுவும், அரசின் அல்லது இதன் பொருட்டு அரசு அதிகாரமளிக்கும் அலுவலரின் ஒப்புதல் இன்றி, இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது.

14. [2][*****]

15. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.– இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனின்படியும் நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும் வாரியத்திற்கு, அரசுக்கு அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதல் கூடாது .

16. பணிப்பாணை வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.– (1) அரசானது, பொது நலனில் அக்கறைக்கொண்டு, ஆணையின் மூலமாக, அந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட நிகழ்வு எதிலும் விசாரணை ஒன்றைச் செய்யுமாறு வாரியத்தைப் பணிக்கலாம்; மற்றும் வாரியமானது குறிப்பிடப்படும் கால அளவிற்குள்ளாக அதனால் செய்யப்பட்ட விசாரணையின் முடிவினை அரசுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

---

1. மேற்படி சட்டத்தின் 4ஆம் பிரிவினால் (22.05.2011 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

2. மேற்படி சட்டத்தின் 5ஆம் பிரிவினால் (22.05.2011 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

(2) உட்பிரிவு (1)இன் கீழ் வாரியத்திடமிருந்து அறிக்கை வரப்பெற்றதன்பேரில், அரசானது, அது பொருத்தமென நினைக்கக்கூடிய பணிப்புரையை வழங்குதல் வேண்டும்; அத்தகைய பணிப்பாணையானது அறுதியானதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

17. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.– (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர், அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமானால் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் ஆகாது அல்லது பிறப்பிக்கப்படுதல் ஆகாது எனச் சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன்பின்னர் அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

18. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.– இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்படாத வகையில், இந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவை என்றோ உகந்தவை என்றோ தனக்குத் தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரை: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலஅளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

19. நீக்கமும் காப்பும்.– (1) 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்ப் பள்ளிக் கல்வி முறை அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2009) இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசர சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கருதப்படுதல் வேண்டும்.